செ. கு. எண்:099 நாள்: 12.07.2017

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி** K. **பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 12.7.2017

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை வட்டம், வடுகபட்டி கிராமம், திருச்சி-மதுரை மெயின் ரோடு, பொம்மநாயக்கன்பட்டி பிரிவு சாலை அருகில் 10.7.2017 அன்று திருச்சியிலிருந்து விராலிமலை நோக்கி சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்தும், திருச்சி நோக்கி சென்று கொண்டிருந்த காரும் மோதிய விபத்தில், காரில் பயணம் செய்த திரு முகமது இஸ்மாயில் என்பவரின் மகன் திரு சபிபுல்லா, திரு சம்சதீன் என்பவரின் மகன் திரு முகமது காதர் மற்றும் திரு அப்துல் சலாம் என்பவரின் மகன் திரு முகமது காசீம் ஆகியோர் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த விபத்தில் இரண்டு நபர்கள் காயமடைந்துள்ளனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு சிறந்த முறையில் சிகிச்சை அளிக்க திருச்சி மாவட்ட நிருவாகத்திற்கும், மருத்துவமனை அதிகாரிகளுக்கும் உத்தரவிட்டுள்ளேன். இவர்கள் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்று எனது விருப்பத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்த மூன்று நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 50,000/-ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

K. **பழனிசாமி**

தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**